## கொடைக்கானல் நகராட்சி

2020ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 14ஆம் நாள் (14.09.2020) திங்கட் கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு கொடைக்கானல் நகராட்சி நகர்மன்றக் கூடத்தில் தனி அலுவலர் தலைமையில் நடைபெறும் சாதாரணக் கூட்டம்.

முன்னிலை: த. நாராயணன், பி.எஸ்.சி., எம்.பி.ஏ.,
தனி அலுவலர்.

1) அரசாணை நிலை எண். 303 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழுங்கல் துறை நாள். 09.09.2020ல், ஒருங்கிணைந்த நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் (IUDM 2020-2021) மானியம் மற்றும் நகராட்சி பங்குத் தொகையுடன் கீழ்க்கண்ட பணிகளை மேற்கொள்வதற்கு அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

| வ. எண். | பணியின் விபரம் | மதிப்பீடு ரூ. இலட்சத்தில் | IUDM Share 20-21 ரூ. இலட்சத்தில் | ULB Share ரூ. இலட்சத்தில் | மொத்தம் ரூ. இலட்சத்தில் |
|---|---|---|---|---|---|
| சிப்பம் – I ( தார்ச்சாலை ) | | | | | |
| 1 | காமராசர் சாலையில் தார்ச்சாலை அமைத்தல் | 109.00 | 520.00 | 130.00 | 650.00 |
| 2 | மூஞ்சிக்கல் முதல் யுனிவர்சிட்டி சந்திப்பு வரை தார் தளம் அமைத்தல் | 148.00 | | | |
| 3 | நாயுடுபுரம் விநாயகர் கோயில் முதல் நகராட்சி எல்லை வரை தார் தளம் அமைத்தல் | 197.00 | | | |
| 4 | லாயிட்ஸ் சாலை முதல் பியர்சோலா ( கல்லுக்குழி) வரை தார் தளம் அமைத்தல் | 196.00 | | | |
| சிப்பம் – II (தார்ச்சாலை ) | | | | | |
| 1 | சீனிவாசபுரம் பகுதியில் தார்ச்சாலை அமைத்தல் | 61.00 | 157.60 | 39.40 | 197.00 |
| 2 | கவி தியாகராசர் சாலையில் தார்ச்சாலை அமைத்தல் | 38.00 | | | |
| 3 | பெண்டர்லாக் சாலையில் தார்ச்சாலை அமைத்தல் | 49.00 | | | |
| 4 | கால்டன் சாலையில் தார்ச்சாலை அமைத்தல் | 49.00 | | | |
| சிப்பம் – III (சிமிண்ட் சாலை ) | | | | | |
| 1 | அண்ணாநகர் பகுதியில் சிமிண்ட் சாலை அமைத்தல் | 25.50 | 91.20 | 22.80 | 114.00 |
| 2 | பெய்ரி பால்ஸ் சாலையில் சிமிண்ட் சாலை அமைத்தல் | 52.00 | | | |
| 3 | பிளிஸ்வில்லா 2வது தெரு பகுதியில் சிமிண்ட் சாலை அமைத்தல் | 36.50 | | | |
| | **மொத்தம்** | **961.00** | **768.80** | **192.20** | **961.00** |

வரப்பெற்ற அரசாணை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு. 1) மன்றம் பதிவு செய்யலாம்.
2) அரசாணையின்படி, மேற்கண்ட பணியினை ஒருங்கிணைந்த நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் (IUDM 2020-2021) மானியம் மற்றும் நகராட்சி பங்குத் தொகை மூலம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **885, நாள். 14.09.2020.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

2) கொடைக்கானல் நகராட்சிக்கு சொந்தமான TN57 AY 5392 பொலிரோ வாகனம் நாளது தேதி வரை 2,00,000 கி.மீட்டருக்கு மேல் ஓடியுள்ளது.இவ்வாகனத்தின் பராமரிப்பு பணி 60,000 கி.மீட்டருக்கு ஒரு முறை மேற்கொள்ளப்பட வேண்டியது. வாகன பற்றாக்குறை மற்றும் கொரோனா வைரஸ் தொற்று ஊரடங்கு நடைமுறையில் இருந்ததால் உரிய காலங்களில் வாகனத்தின் பராமரிப்பு பணி மேற்கொள்ளப்படாமலும், வாகனத்தின் உற்பத்தி நிறுவன அங்கீகாரம் பெற்ற பணிமனை இயங்காததாலும், வாகனத்தின் பழுது பணிகள் மேற்கொள்ளப்படவில்லை. எனவே, இவ்வாகனத்தின் ஆயில் சர்வீஸ் மற்றும் இதர மராமத்து சர்வீஸ் பணிகளை வாகனத்தின் உற்பத்தி நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற மதுரை, கப்பலூர், AMPL பணிமனையில் மேற்கொள்ள விலைப்பட்டியல் கோரப்பட்டதில் உத்தேச மதிப்பு ரூ. 1,18,000/– க்கு பெறப்பட்டுள்ளது (Quotaton No. QTN21A000192 dated 4.9.2020). எனவே, இவ்வாகனத்தின் பழுதுகளை மதுரை, கப்பலூர், AMPL பணிமனையில் மேற்கொள்ளவும், அதற்கான செலவினத்தினை பொது நிதியின் மூலம் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு. 1. அனுமதிக்கலாம்.
2.வாகனத்தின் பயன்பாட்டினை கருத்தில் கொண்ட அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **886, நாள். 14.09.2020.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

3) மதுரை மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநரக அலுவலக பயன்பாட்டிற்கு கீழ்க்கண்ட கணணி பொருட்கள் ஒப்பந்தப்புள்ளி கோரி வாங்கி வழங்கிட நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை அவர்களின் கடிதம் ந.க.எண். 2043/2008/பி1 நாள். 04.09.2020 ல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

| வ.எண். | கணணி பொருட்களின் விபரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | Smart Desktop PC | 1 No |
| 2 | Laptop PC | 1 No |
| 3 | Digital Copier | 1 No |

எனவே மேற்கண்ட பொருட்களை ஒப்பந்தப்புள்ளி கோரி பொது நிதியின் மூலம் ரூ.4.50 இலட்சம் மதிப்பீட்டில் வாங்கி வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு. அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **887, நாள். 14.09.2020.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

4) கொடைக்கானல் நகராட்சிக்கு சொந்தமான செண்ட் மேரிஸ் சாலை பார்க் வியு மற்றும் ஆணையர் குடியிருப்பு பகுதிகளில் உள்ள நகராட்சிக்கு சொந்தமான சுமார் 1.00 ஏக்கர் பரப்புள்ள காலியிடமானது செடிகள் மூடியும், மண் மேடுகளாகவும் உள்ளது. இந்த இடத்தினை சுத்தம் செய்து, மண் மேடுகளை சமப்படுத்தி அம்மா உணவகத்திற்கு தேவையான காய்கறிகள் பயிரிடுவதற்கு ஏதுவாக நிலத்தினை சீர் செய்து பயன்பாட்டிற்கு கொண்டு வர JCB இயந்திரம், பிக்கப் வாகனம் மற்றும் உடைகற்களுக்கு ஆகும் செலவினத்தினை பொது நிதியின் மூலம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. இதற்காகும் உத்தேச செலவுத் தொகை ரூ. 90,000/– ஆகும்.

அலுவலக குறிப்பு. 1) அனுமதிக்கலாம்.
2) அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **888, நாள். 14.09.2020.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

5) கொடைக்கானல் நகராட்சி பகுதியில் குடிநீர் விநியோகம் செய்யும் ஆழ்துளை கிணறு மின் மோட்டார்களில் அடிக்கடி ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரி செய்திடும் பொருட்டு ஆண்டு பராமரிப்பு பணி மேற்கொள்வதற்கு குடிநீர் நிதியின் மூலம் ரூ. 8.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு. அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **889, நாள். 14.09.2020.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

6) கொடைக்கானல் நகராட்சியின் 1 முதல் 24 வார்டு வரை உள்ள குடிநீர் விநியோகம் சி.ஐ. மற்றும் ஜி.ஐ. குழாய்கள் மூலம் சீரான முறையில் வழஙகப்பட்டு வருகிறது. இந்த விநியோக குழாய்களில் அடிக்கடி குழாய் உடைப்பு ஏற்பட்டு நகர் பகுதியில் குடிநீர் விநியோகம் பாதிக்கப்பட்டு வருகிறது. எனவே, வார்டு எண். 1 முதல் 24 வரை உள்ள குழாய் உடைப்புகள், குடிநீர் கசிவுகள் மற்றும் வால்வுகளை உடனுக்குடன் சரி செய்திடும் பொருட்டு ஆண்டு பராமரிப்பு குடிநீர் நிதியின் மூலம் மேற்கொள்வதற்கு மதிப்பீடு ரூ. 10.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு. 1) அனுமதிக்கலாம்.
2) தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரிய அலுவலக நடைமுறையை மன்றம் ஏற்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **890, நாள். 14.09.2020.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

7) கொடைக்கானல் நகராட்சியின் புதிய பொலிரோ வாகனம் TN 57 BU 9623 நாளது தேதிவரை 40,000 கி.மீட்டருக்கு மேல் ஓடியுள்ளது. எனவே, இவ்வாகனத்தின் ஆயில் சர்வீஸ், டயர் மற்றும் இதர மராமத்து சர்வீஸ் பணிகளை வாகனத்தின் உற்பத்தி நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற மதுரை, கப்பலூர், AMPL பணிமனையில் பொது நிதியின் மூலம் மேற்கொள்ளவும், இதற்காகும் உத்தேச செலவுத் தொகை ரூ.49,600/– (ரூபாய் நாற்பத்து ஒன்பதாயிரத்து ஆறு நூறு மட்டும் ) க்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு. 1) அனுமதிக்கலாம்.
2) அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.
(கோப்பு ந.க.எண். 3564/2018/இ1)

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **891, நாள். 14.09.2020.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

ஒம்/–த.நாராயணன்,
தனி அலுவலர்,
கொடைக்கானல் நகராட்சி.

/உண்மை நகல்/

ஆணையாளர்,
கொடைக்கானல் நகராட்சி.